# கவிதையின் அரசியல்: மனுஷ்யபுத்திரனின் கவிதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

**சர்மினி தியாகரன்**
உயர்பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## ஆய்வுச் சுருக்கம்

மனுஷ்யபுத்திரனின் கவிதைகளின் அரசியல் பற்றியதான இவ்வாய்வு மனுஷ்யபுத்திரனின் கவிதைகள் கட்டமைக்கும் அரசியல் தத்துவ மற்றும் அழகியல் அடிப்படைகள் மூலம் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. கவிதை, கருத்துநிலை என்பன பற்றி கோட்பாட்டு ரீதியாக ஆராயப்பட்டு கவிதைக்கும் கருத்துநிலைக்கும் இடையேயான உறவுநிலை பற்றி விளக்கி எல்லாக் கலை இலக்கியங்களும் அடிப்படையில் ஏதோ ஒரு கருத்துநிலை சார்ந்து இயங்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. கவிதையின் அரசியல் என்பது படைப்பாளியின் கருத்துநிலை வெளிப்பாடேயாகும். குறிப்பாக மனுஷ்யபுத்திரனது கவிதைகளின் பேசுபொருள், வடிவம், வெளிப்பாட்டுமுறை மற்றும் மொழியுடல் என்பன அவரது அனுபவ உணர்வுகளினதும், கருத்துலகினதும் அழகியல் வெளியாக சிருஸ்டித்துள்ளமை இனங்கானப்பட்டுள்ளது. மனுஷ்யபத்திரனின் கவிதைகள் பற்றிய ஆய்வின் மூலம் தமிழ்க்கவிதை வரலாற்றில் ஒரு பகுதியையும் அதே நேரத்தில் தமிழ்ச் சமூக பண்பாட்டின் ஒரு பகுதித் தேவையையும் நிறைவு செய்கின்றது.

**பிரதான சொற்பதங்கள்**: கவிதை, அரசியல், கருத்துநிலை, கலை, இலக்கியம்.

## ஆய்வு அறிமுகம்

இலக்கியம் பற்றிய ஆய்வு என்பது அடிப்படையில் கருத்துநிலை சம்மந்தப்பட்டதாய் உள்ளது. எல்லாக் கலைகளும் ஏதோ ஒரு வகையில் ஒரு சமூகத்தின் கருத்துநிலையினைச் சார்ந்தே இயங்குகின்றது. படைப்பின் அழகியல் என்பது ஒரு கால சமூகத்தின் கருத்துநிலை வெளிப்பாடாக உள்ளது. படைப்பின் பேசுபொருள் உள்ளடக்கம் பற்றிப் பேசுவதென்பது அடிப்படையில் கருத்துநிலை பற்றிப் பேசுவதாகும். படைப்பாளியின் அல்லது படைப்புத் தோன்றிய காலச் சூழலைத் தீர்மானிப்பதில் கருத்துநிலை முக்கிய பங்கு வகிக்கின்றது. படைப்பாளியின் கருத்துச் சார்ந்த விடையம் கருத்துநிலையாகும். கவிதையின் அரசியல் என்பதும் படைப்பாளியின் கருத்துநிலை வெளிப்பாடேயாகும். ஒவ்வொரு கலை வடிவமும் கருத்துநிலைச் சார்பாகவே கட்டமைக்கப்படுகின்றது.

மனுஷ்யபத்திரனின் கவிதைகள் கட்டமைக்கும் அரசியல் அவரது கவிதைகளின் கருத்துநிலை மற்றும் தத்துவ அழகியல் அடிப்படைகளுடன் மீள்வாசிப்புச் செய்து அவற்றின் மூலம் மேற்கிளம்பும் வர்க்கச்சார்பு நிலைகளையும் இனங்காட்டுவதாக இவ்வாய்வு அமைகின்றது. மனுஷ்யபுத்திரனின் கவிதைகளின் அரசியல் பற்றியதாக அமையும் இவ்வாய்வின் மூலம் தமிழ்க்கவிதை வரலாற்றின் ஒரு பகுதியையும் அதே நேரத்தில் தமிழ்ச்சமூக பண்பாட்டின் ஒரு பகுதித் தேவையையும் நிறைவு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுப்பிரச்சினை

மனுஷ்யபுத்திரனின் கவிதைகள் உடனிகழ்கால சமூக மற்றும் தனிமனித உளவியல் அடிப்படைகளையும் அவற்றின் கருத்துநிலைகளையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. ஆனால் அவர் பற்றிய இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எதுவும் மேற்குறித்த அம்சங்கள் எவற்றையும்

முன்னிறுத்தி மேற் கொள்ளப்படவில்லை. இவருடைய கவிதைகள் பற்றிய ஒற்றைப்படையான பார்வைகளாகவே இவரது கவிதைகள் பற்றிய ஆய்வுகள் அமைகின்றன. இதனால் இவரது கவிதைகளின் அழகியல் அடிப்படைகளையும் கருத்துநிலை அடிப்படைகளையும் விளங்கிக் கொள்வது பெரும் புலமைத்துவம் சார்ந்த பிரச்சினையாக உள்ளது.

## ஆய்வின் நோக்கும் இலக்கும்

மனுஷ்யபுத்திரனின் கவிதைகளின் அரசியலை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மனுஷ்யபுத்திரனின் கவிதைகள் கட்டமைக்கும் கருத்துநிலை பற்றிய புரிதல்களை மேற்கொள்ள பின்வரும் இலக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. கவிதையும் அரசியலும் பற்றி விளங்கிக் கொள்ளல்.
2. மனுஷ்யபுத்திரனின் கவிதைகளின் கருத்துநிலைகளைப் பற்றி விளங்கிக் கொள்ளல்.
3. கருத்துநிலை கட்டமைக்கும் அழகியலையும் அழகியல் கட்டமைக்கும் கருத்துநிலையையும் விளங்கிக்கொள்ளல்.

## ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வானது மார்க்சிச விமர்சனக் கோட்பாட்டையும், அழகியல் மற்றும் மொழியியல் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்ட விபரண முறையியலை ஆதாரமாகக் கொண்டு பண்புசார் ஆய்வாக மேற்கொள்ளப்படுகின்றது.

## கண்டுபிடிப்பும் நிறைவுரையும்

இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தின் கருத்துநிலை வெளிப்பாடுகளாக உள்ளன. மனுஷ்யபுத்திரனின் கவிதைகள் இவருடைய கருத்துநிலைப்பாடுகளின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. இவருடைய கவிதைகள் பெரும்பாலும் உணர்வெழுச்சி, இடதுசாரி இயக்கம் சார்ந்த சிந்தனை, தன்னிரக்கம், புரட்சிகரம், தாழ்த்தப்பட்ட குறையாழுமையுடைய சமூகத்தின் கருத்துக்கள், அரசியல் குரல்கள், உடற்குறை சார்ந்தவை, பக்தி, வன்முறை முதலிய பேசுபொருள்களைக் கொண்டமைந்துள்ளன. இக் கவிதைகள் இவருடைய கருத்துநிலை வெளிப்பட்டு நிற்கும் தர்க்க பூர்வமான கலை வடிவங்களாக அமைகின்றன. கருத்துநிலையை வெளிப்படுத்துவதற்கேற்ற வகையில் கவிதை உடலை, வெளிப்பாட்டு முறையை இவர் அமைத்துள்ள விதம் தனித்துவமானது. இவரது கவிதைகள் கருத்துநிலைகளாகி மனிதனின் இருப்பு கேள்விக்குள்ளாகுவதையும், அன்பு காட்டுவதற்குப் பின்னால் இருக்கும் அரசியலையும், நம்பமுடியாத நிஜங்களைக் கூறுவதாயும், முடியவே முடியாத நீண்ட உணர்வுகள் பற்றியும் இந்த உலகில் உள்ள ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் தரக்கூடியதாகவும் ஒவ்வொரு சொல்லின் மீதும் நிஜங்கள் தெரிவதாயும் கவிதைகளில் கூறியுள்ளார்.

இக்காலப்பகுதியில் இருக்கின்ற அழகியல் நிலை மற்றும் இலக்கிய ஆய்வினதும் சமூக ஆய்வினதும் ஒருபகுதித் தேவை இவரது கவிதைகளை ஆய்வு செய்வதன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது.